**Judicial Form No.**53
(See Rule 42)
**DEPOSITION OF WITNESSES**
(**Chapter XXII**, **Cr.P.C.**)
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, SULUR.**

| | | |
|---|---|---|
| Calendars<br>Miscellaneous<br>Preliminary Register<br>Sessions | } | Case No. CC 583 of 2017 |

Depositions of PW -4 witness for ________ { Prosecution / Defence / Court

Name : மனோஜ் குமார்

Father's Name : த/பெ. நடராஜ்

Village :

Taluk :

Calling :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 13th **day of May** 2026.

**(1,2 எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். போலீசார் சாட்சிகளை நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தினார்கள்)**

**அரசு தரப்பில் முதல்விசாரணை**

நான் கருமத்தம்பட்டி கரவலிமாதாப்பூர்குடியிருந்து கொண்டு விவசாயம் பார்த்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியாது. கடந்த 19.06.2016 ஆம் தேதி மதியம் சுமார் 2.00 மணி அளவில் நான் எனது வீட்டு அருகே இருசக்கர வாகனத்தில் நின்று கொண்டிருந்த பொழுது ஜெயக்குமார் அவர்களின் மனைவி பேபி தன்னுடைய செயின் அறுத்துக் கொண்டு செல்வதாக சத்தம் போட்டார். அப்பொழுது இரண்டு நபர்கள் பல்சர் இருசக்கர வாகனத்தில் வேகமாக சென்றார்கள். நாங்கள் சென்றோம். அவர்களை நால்ரோடு ஜங்ஷன் வரை சென்றும் அவர்கள் எங்கு எவ்ழியாக சென்றார்கள் என தெரியவில்லை. பின்னர் வந்து என்ன நடந்தது என பேபி அவர்களிடம் கேட்டு தெரிந்து கொண்டேன். இது சம்பந்தமாக பேபி காவல் நிலையத்தில் புகார் அளித்தார். போலீசார் என்னை விசாரித்தார்கள். இருசக்கர வாகனத்தின் பதிவு எண் நான் அப்பொழுது பார்க்கவில்லை.

1 ம் மற்றும் 2 ம் எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

பேபி சத்தம் போட்டவுடன் நான் சென்று பார்த்தேன் என்றால் சரிதான். பேபி கழுத்தில் அணிந்து இருந்த தங்கச் சங்கலியை யார் அறுத்து சென்றார்கள் என்று எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். அப்பொழுது எத்தனை வண்டியில் வந்தார்கள் என்றால் ஒரு வண்டியில் தான் வந்தார்கள். காவல் நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்தேன். பேபி எனக்கு அக்கா முறையாகும். நான் பேபி சத்தம் போட சென்று பார்த்தேன் என வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. பேபி எனது உறவினர் என்பதால் அவர் கொடுத்த பொய்யான புகாருக்கு ஆதரவாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரி அல்ல.

**மறுவிசாரணை** இல்லை

**Signature of Witness**

(**Sd/- T. Arunkumar**)
**Judicial Magistrate**,
**Sulur**.